சூழ்நிலையிலே அதை செய்யமுடியாது என்று தெரிவித்தேன். பொதுவாக நம்முடைய புறவழிச் சாலைகளை அமைக்கின்றபோது நாம் ஏற்கனவே தெரிவித்ததுபோல, இதைவிட வாகனப்போக்குவரத்து அதிகமுள்ள இடங்கள், முன்னுரிமைப்பெற்ற இடங்கள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே நான் ஏற்கனவே சொன்ன பதிலைத்தான் சொல்லவிரும்புகிறேன். அந்தச் சாலைகளைப் பரிசீலித்த பின்னாலேதான் இந்தச் சாலை குறித்து பரிசீலித்து முடிவுக்கு வரமுடியும். ஆகவே எதிர்காலத்திலே இதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 111, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

111—

இராமநாதபுரம் மாவட்டத்தில் மின்னணு தொழிற்பேட்டை அமைத்தல்

*** 37706** டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் மின்னணு தொழிற்பேட்டை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் அத்தகைய கருத்துக்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற விஞ்ஞான உலகத்தில் மின்னணுத்துறை ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றுவருகின்றது. இன்றையதினம் தரமான பொருள் உற்பத்திக்கு மின்பொருள்கள் ஆய்வுக் கூடத்தை நிறுவியும், தொழில் நுட்பத்திற்கு புதிய பாடத்திட்டங்களை வகுத்து செயலாற்றி இந்திய திருநாட்டில் மின்னணுவில் முன்னணியில் திகழ்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியில் பின்தங்கியுள்ள மாவட்டங்களை முன்னேற்றவேண்டுமென்ற உயரிய எண்ணத்தில் பின் தங்கியுள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு மின்னணுத் தொழில்பேட்டையை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்முனைவோர் முன்வந்தால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

முற்பகல் 10.50

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சிட்கோ மூலம் சிறப்பான நிதி ஒதுக்கி 53 கோடி ரூபாய்க்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கிண்டியில் ஒரு தொழில்பேட்டையை நிறுவி, அதிலும் பெண்களுக்கு என்றே மின்னணு தொழில்பேட்டைகள் எல்லாம் வழங்கி இருக்கிறார்கள். பின்தங்கிய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து சென்னை, பம்பாய் போன்ற இடங்களுக்கு சென்று மின்னணு தொழிலில் சிறப்பாக செயலாற்றி வருகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கின்ற எண்ணத்தின் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏதாவது ஒரு இடத்தில் மின்னணு தொழில்பேட்டையை துவங்குவதற்கு—பெண்களுக்கு என்று தனியாக தொடங்குவதற்கு—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுத்து திட்டத்தை செயல்படுத்துவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலே தொழில்முனைவர்கள் முன்வந்ததன் காரணமாக அந்தத் தொழில்பேட்டையை நாம் சிட்கோ மூலமாக உருவாக்கிக் கொடுத்திருக்கின்றோம். அதேபோன்று இராமநாதபுரம் மாவட்டத்திலும் தொழில்முனைவதற்கு முன்வருவார்களேயானால் அதைப்பற்றி அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 112, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

112—

வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலம் சாலையைச் செப்பனிடுதல்

*** 36587**—திரு. தா. வேடியப்பன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம், திருசூர்-போளூர் (வழி) அல்லி நகர் சாலையை வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை மூலம் செப்பனிட அரசு முன்வருமா?